**மினுவாங்கொடை பிரதேச சபை**

**கம்பஹா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மினுவாங்கொடை பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆம் ஆண்டில் கணக்குகளுக்கு கொண்டுவரப்படாத நிலையான வைப்பு வட்டி மீளாய்வாண்டின் போது கணக்கு வைக்கும் போது திரண்ட நிதியத்தில் செலவு வைப்பதற்குப் பதிலாக நிலையான வைப்பு வட்டி கணக்கில் செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 760,278 இனால் அதிகரித்திருந்தது.

(ஆ) 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி வைப்புச் செய்யப்பட்ட ரூபா 30,000,000 தொகையான நிலையான வைப்பிற்காக மீளாய்வாண்டில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,237,500 தொகை கணக்குகளில் சீராக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்கான அனுமதிப்பத்திர கட்டணம் சிட்டையிடல் ரூபா 1,785,969 ஆக இருந்த போதிலும் ரூபா 1,616,732 ஆக கணக்கு வைக்கப்பட்டமையினால் அந்த வருமானம் ரூபா 169,237 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது ஆதனவரி அறவிடலில் வழங்கப்பட்ட கழிவுத்தொகை ரூபா 1,216,681 ஆக இருந்த போதிலும், ரூபா 1,374,112 ஆக கணக்கு வைக்கப்பட்டமையினால் வழங்கப்பட்ட கழிவு ரூபா 157,431 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 09 கணக்கு விடயங்களின் கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும் அத்திகதியில் உள்ள பட்டோலைகளின் பிரகாரமான மீதிக்கும் இடையே ரூபா 8,722,455 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வருமானத்திற்கான வைப்பு மீதி, கணக்குகளின் பிரகாரம் ரூபா 30,263,684 ஆகவும், பேரேட்டின் பிரகாரம் ரூபா 16,929,558 ஆகவும் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் ரூபா 12,523,243 ஆகவும் மீதிகளில் வேறுபாடு காணப்பட்டன.

**1.3.3 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை**

மீதி உறுதிப்படுத்தல் மற்றும் உறுதி செய்தல் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 1,144,079 கூட்டுத்தொகையான 02 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1952 இன் 06 ஆம் இலக்க உள்ளுராட்சி நிறுவன (அங்கீகரிக்கப்பட்ட உப விதி) அதிகாரச்சட்டத்தின் (iv)அ பகுதியின் 17(ஆ) பிரிவு | - | மாரப்பொல அன்னாசி வத்த காணியில் கூறிடல் 2004 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் இறுதிக் காணிக்கூறு 2017 ஒக்தோபர் 13 ஆந் திகதி விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் கூறிடும் செல்லுபடிக்காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 395 | - | 02 வங்கி நடைமுறைக் கணக்குகளுக்காக தனித்தனியாக வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,288,135 ஆக

இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,234,067 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' | ரூபா 000' |
| வீதவரியும் வரியும் | 22,161 | 19,805 | 19,734 | 8,734 | 20,223 | 18,964 | 20,553 | 8,990 |
| வாடகை | 2,581 | 1,984 | 1,817 | 171 | 1,770 | 2,457 | 2,552 | 04 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,601 | 1,617 | 1,744 | (127) | 2,610 | 1,922 | 1,922 | - |
| ஏனைய வருமானம் | 9,509 | 534 | 480 | 104 | 8,125 | 388 | 528 | 49 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

(அ) ஆண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ஆதனவரி நிலுவையில் ரூபா 4,101,124 தொகை மாத்திரம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 4,300 தொகையான வாடகை நிலுவை மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 171,292 வரை அதிகரித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான அனுமதிப்பத்திரக் கட்டண நிலுவை ரூபா 42,000 ஆக இருந்த போதிலும் கணக்குகளில் ரூபா 127,000 மறை ரீதியாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

(அ) மாபொதல மற்றும் உடுகம்பொல உப அலுவலகங்களின் ஆதன மதிப்பீடு இறுதித் தடவையாக 2009 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்தது.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்னைய ஆண்டுகளுக்குரிய நிலுவையான ரூபா 6,893,689 தொகையில் உடுகம்பொல உப அலுவலகத்தில் 1,964 ஆதனவரி அலகுகளிலிருந்து ரூபா 1,795,332 தொகை மற்றும் மினுவாங்கொடை உப அலுவலகத்தில் 2,736 ஆதனவரி அலகுகளில் ரூபா 2,334,001 தொகை என்பன அறவிட வேண்டி இருந்தது.

### 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

(அ) 2008 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை பிரதேச சபைக்கு அறவிட வேண்டியிருந்த ரூபா 1,880,478 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மாகாண

இறைவரி ஆணையாளரால் அத்தனகல்ல பிரதேச சபைக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் 2017 ஆகஸ்ட் 17 ஆந் திகதி நடைபெற்ற அரச கணக்குகள் செயற்குழு கூட்டத்தின் போது அத்தனகல்ல பிரதேச சபையில் இருந்து அந்தப் பணத்தை மீளப்பெற்றுக் கொள்வதற்கு கட்டளை இடப்பட்டபோதும் இதுவரை அந்தப் பணத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 முதல் 2017 வரை மினுவாங்கொடை பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குரியதாக தொடரப்பட்ட வழக்குகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) இலக்குகளை நிறைவேற்றுவதில் தாமதம்**

முன்அலுவலகமொன்றை ஸ்தாபிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ரூபா 199,777 தொகை மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு 2017 நவம்பர் 02 ஆந் திகதி அளவில் அந்த அலுவலகத்திற்கு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2018 மே 15 ஆந் திகதி வரையிலும் அந்த முன்அலுவலக நிர்மாணம் இடம்பெற்றிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த நலன்கள் (Out Come) பெறப்படாமை**

(i) கூட்டுப்பசளைத் தளத்தில் உற்பத்தி செய்யப்படுகின்ற கூட்டுப்பசளை மற்றும் உருக்கப்பட்ட பொலித்தீன் என்பவற்றை களஞ்சியப்படுத்தும் நோக்கில் ரூபா 2,423,794 செலவில் 03 களஞ்சிய அறைகளையுடைய வள நிலையமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த வள நிலையம் 2018 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) சியனே ஸ்வசக்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மரக்கறி, பழ வகைகள் மற்றும் உள்நாட்டு மூலப்பொருட்களுடன் அண்மித்ததாகத் தயாரிக்கப்பட்டு உணவு விற்பனை செய்யப்பட்டுகின்ற, உணவுக் கூடாரங்கள் என்பன ரூபா 545,500 செலவில் உடுகம்பொல மின்மெதுர அருகில் நிர்மாணிக்கப்பட்டு 2017 ஒக்தோபர் மாதம் அளவில் உணவுக் கூடாரம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஏப்ரல் வரையிலும் இந்த செயற்திட்டம் அமுல்படுத்தும் நிலையில் காணப்படவில்லை.

**(இ) கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

(i) பிரதேசத்தில் சேகரிக்கப்படுகின்ற உக்கும் கழிவுகளைப் பயன்படுத்தி கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் நோக்கில் மாபோதல கோணஒடேவத்த பிரதேசத்தில் பாரிய இட வசதிகளுடன் கூட்டுப்பசளைத் தளமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் கூட்டுப்பசளைத் தளத்தில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் செயற்பாடுகள் அமுல்படுத்தப்படவில்லை.

(ii) கூட்டுப்பசளைத் தளத்தை நடாத்திச் செல்வதற்காக கழிவுப் பொருட்களை வகைப்படுத்துதல் மற்றும் மீள் சுழற்சி நடவடிக்கைகளின் செயல்முன்னேற்றம் 99 சதவீதமாகவும் வள நிலையத்தை நடாத்திச் செல்லும் செயல்முன்னேற்றம் 98 சதவீதமாகவும் அறிக்கையிடப்பட்டு இருந்த போதிலும் கூட்டுப்பசளைத் தளத்தில் கூட்டுப்பசளை உற்பத்தி செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் வள நிலையத்தின் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அதனைப் பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) கட்டணம் செலுத்தாத வியாபார நிலையங்களின் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக நகரசபையினால் நடவடிக்கை எடுக்கப்படாமை காரணமாகபிரதான வீதியில் மீண்டும் மீண்டும் கழிவுப்பொருட்கள் போடப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்கள் தொடர்பான சட்டத்தின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருந்த போதிலும் உரிய இலக்குகளை அடைந்துகொள்வதற்கான பணிகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான கட்டணங்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) மீளாய்வாண்டில் இரண்டு வங்கி நடைமுறைக் கணக்குகளில் சராசரி மீதி ரூபா 67,956,145 ஆக இருந்ததுடன் அதனை கையில் வைத்திருந்ததன் மூலம் பிரதேசத்தில் மக்களுக்காக அமுல்படுத்த வேண்டிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அமுல்படுத்துதல் குறைவான மட்டத்தில் காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான உடுகம்பொல மீன்வளர்ப்பு வாகன தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்களுக்காக நுழைவுச்சீட்டு விநியோகிக்கப்பட்டு பணம் சேகரிப்பதற்காக பொறுப்பு வாய்ந்த நபர் ஒருவர் நியமிக்கப்படாமல் அந்த நடவடிக்கைகள் மீன்வளர்ப்பு மற்றும் சுற்றாடல் சுத்திகரிப்பு செய்யும் வேலைகளைச் செய்கின்ற களத் தொழிலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அவர் காலை நேரத்தில் மீன்வளர்ப்பு மற்றும் சுற்றாடலை சுத்தஞ் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றமையால் அந்த நேரத்தில் நிறுத்தி வைக்கப்படுகின்ற வாகனங்களுக்காக நுழைவுச் சீட்டு விநியோகிக்கப்படாதிருந்ததுடன் அதன் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய வருமானம் சரியான பிரகாரம் கிடைத்திருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

காணி கூறிடப்பட்டு விற்பனை செய்வதற்கான சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கும் போது உள்ளக வீதிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளுக்காக நிபந்தனை சமர்ப்பிக்கப்படாமையினால் அவ்வாறு சபைக்கு கையேற்கப்பட்ட ஏல விற்பனைக் காணிகளில் வீதி அபிவிருத்தி செய்வதற்காக சபையினால் கணிசமான செலவினமொன்று செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு கையேற்கப்பட்ட 07 ஏல விற்பனைக் காணிகளில் பாதைகளை கொங்கிறீட் இடுவதற்காக மீளாய்வாண்டில் ரூபா 3,954,490 தொகையான செலவினமொன்று சபையினால் செலவிடப்பட்டிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

## 3.4.1 கையேற்கப்படாத சொத்துக்கள்

04 ஏலமிடப்பட்ட காணிகளில் சபைக்கு கையேற்பதற்கு முன் ரூபா 985,280 செலவினமொன்று செய்து சபையினால் கொங்கிறீட் இடப்பட்டிருந்தது.

## 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

ஏலமிடப்பட்ட காணிகளில் இருந்து சபைக்கு வழங்கப்பட்ட நில்பனாகொடையில் அமைந்துள்ள பொதுக் காணியில் அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் குடியிலிருந்து வருகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அந்த நபர்களை அகற்றுவதற்கு 2018 மார்ச் 14 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த பொது காணிகளின் உரித்துறுதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 3.5 பெறுகைகள்

## 3.5.1 ஒப்பந்த நிர்வாகம்

(அ) வேகொல்ல நாகமர அருகில் வெயாங்கொட வீதி வரை வீதியின் (சுமித்ரா மாவத்தை) குறுக்கு வீதிக்கு (1 ஆம் கட்டம்) சிறு கற்கள் இடுவதற்கு ரூபா 998,468 பெறுமதியில் 2014 நவம்பர் 13 ஆந் திகதி வேகொவ்வ விவசாய அமைப்புக்கு 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் கல் தொடர்பான நியம சான்றிதழ் 2015 நவம்பர் 15 ஆந் திகதி கிடைத்திருந்தது. ஒப்பந்த காலம் கடந்திருந்த போதிலும், கால நீடிப்பு இடம்பெறாதிருந்ததுடன் சேவை தொடர்பாக எந்தவொரு மேற்பார்வை செய்யப்படாமைக்கும் சான்றுகள் காணப்படவில்லை. 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி அந்த விவசாயச் சங்கத்தினால் ரூபா 996,416 தொகை செலுத்துமாறு கோரப்பட்டிருந்தது.

(ஆ) உடுகம்பொல வாராந்த சந்தை நிர்மாணிப்பதற்கான 2 ஆவது கட்டத்தின் ஒப்பந்த காலம் 2015 யூலை வரையும், 2 ஆவது கட்டத்தின் ஒப்பந்த காலம் 2016 யூலை 15 ஆந் திகதி வரையிலும் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் பிணை முறியின் திகதி நீடிக்கப்பட்டிருக்கவில்லை. 1 ஆவது கட்டம் 04 மாதங்களும், 2 ஆவது கட்டம் 03 மாதங்களும் தாமதமடைந்திருந்தமையால் உடன்படிக்கையின் 4 ஆவது பிரிவின் பிரகாரம் இரண்டு கட்டத்திற்காக ஒரு சங்கத்திற்கு முறையே ரூபா 155,247 தொகை மற்றும் ரூபா 63,594 தொகை வீதம் ரூபா 3,247,080 தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்நாட்டு நிறுவனங்களைக் கட்டி எழுப்பும் மூலதன நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பத்தண்டுவன உப அலுவலகம் மற்றும் நூலகக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிப்பதற்காக 2016 யூலை 18 ஆந் திகதி ரூபா 4,620,000 தொகையில் முதலாவது கட்டமும், இரண்டாவது கட்டம் ரூபா 5,000,000 தொகையில் (பெறுமதி சேர் வரியுடன்) மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வேலை விடய இலக்கம் 1 முதல் 24 வரை முதலாவது கட்டமாகவும் வேலை விடய இலக்கம் 25 முதல் 42 வரை இரண்டாவது கட்டமாகவும் காண்பிக்கப்பட்டதுடன் அளவிடைப் பத்திரம் முதலாவது கட்டத்திற்காக மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தினதும் இரண்டாவது கட்டிடத்தினதும் பெறுமதிகளுக்காக தனித்தனியாக உடன்படிக்கை

செய்யப்பட்டிருந்த போதிலும் செய்திப் பத்திரிகை அறிவித்தல் ஒரு மதிப்பீட்டிற்காகவே தயாரிக்கப்பட்டிருந்ததுடன் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.1(ஆ) இன் பிரகாரம் கேள்வி மதிப்பீடு கேள்வி கோரல் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்ட முறைமைக்கு இணங்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கு முரணாக இரண்டு மதிப்பீடுகளும் ஒன்று எனக் கருதி மதிப்பீட்டுக் குழுவினால் தீர்மானித்து உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது.

(ii) மதிப்பீட்டின் முதலாவது கட்டத்தின் பெறுமதி ரூபா 4,013,550 (வற் தவிர்த்து) தொகையாக இருந்ததுடன் கேள்வி கையளிக்கப்பட்ட ஆகக் குறைந்த கேள்விதாரரின் பெறுமதி ரூபா 5,181,995 ஆகக் காணப்பட்டது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் இரண்டு மதிப்பீடுகளும் ஒன்று எனக் கருதி ஆகக் குறைந்த கேள்விதாரர்களுக்கு மொத்தக் கேள்வியில் 0.51 சதவீதத்திற்கு குறைவாக இருந்ததாகக் குறிப்பிட்டு கையளிக்கப்பட்டு இருந்தது. முதலாவது கட்டத்தின் ஆகக்குறைந்த கேள்விதாரரின் கேள்வி மதிப்பீட்டை விஞ்சி ரூபா 1,168,445 ஆக இருந்ததுடன் மதிப்பீட்டுத் தொகையில் கேள்வியினை கையளிப்பதற்கு இணக்கஞ் செய்யப்படாது ஆகக்குறைந்த கேள்வி என கூறி அந்த ஒப்பந்தக்காரருக்கு கேள்வி கையளிக்கப்பட்டமையால் சபைக்கு ரூபா 1,168,445 நட்டம் ஒன்று ஏற்பட்டு இருந்தது. இந்த மதிப்பீட்டுப் பெறுமதிக்கும் உடன்படிக்கைப் பெறுமதிக்கும் இடையே அதிகளவான விலை முரண்கள் ஏற்பட்டிருந்ததுடன் மதிப்பீட்டுக் குழுவினாலும் கேள்வி சபையினாலும் அது தொடர்பாக கவனத்திற் கொள்ளாமல் புறக்கணிக்கப்பட்டிருந்தது. முதலாவது கட்டத்தின் மதிப்பீட்டின் இறுதி வேலை விடய இலக்கம் 21, 23 மற்றும் 24 என்ற பணிகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் வேலை பூர்த்தி செய்யப்பட்டமைக்கான பரிந்துரையுமின்றி 2017 மார்ச் 09 ஆந் திகதி ரூபா 4,002,155 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(iii) இரண்டாவது கட்டத்தின் மதிப்பீடு ரூபா 4,294,116 ஆக இருந்ததுடன் ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட ஒப்பந்தக்காரரின் கேள்வி ரூபா 3,083,540 ஆக இருந்தது. பெறுகை வழிகாட்டிக் கோவையின் 7.9.11 இன் பிரகாரம் சாத்தியமற்ற மற்றும் குறைந்த அளவிடை விலை வீதங்களுக்காக மதிப்பீட்டுக் குழு விடயங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டமைக்கான சான்றுகள் கோவையில் காணப்படாதிருந்ததுடன் அது ரூபா 1,210,576 தொகை அதாவது 28.1 சதவீதத்திற்கு குறைவானதாகும்.

(iv) இரண்டாவது கட்டம் 2017 பெப்ரவரி 27 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் முதலாவது கட்டம் மற்றும் இரண்டாவது கட்டம் என்பன ஒரு கொடுப்பனவாகக் கருதி கொடுப்பனவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முதலாவது கட்டத்தின் 21, 23, 24 என்ற செலவின விடயங்களுடன் இரண்டாவது கட்டம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதற்கான தாமதம் கட்டணம் கணிப்பிடப்பட்டு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பத்தன்டுவன உப அலுவலகம் மற்றும் நூலகக் கட்டிடம் என்பவற்றை நிர்மாணிக்கும் இறுதிக் கட்டத்தின் (III ஆம் கட்டம்) ஆகக் குறைந்த கேள்வி சமர்ப்பித்த மேற்கூறப்பட்ட ஒப்பந்தகாரருடன் 2017 யூலை 12 ஆந் திகதி மூன்று மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு ரூபா 7,934,169 தொகையில் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதிய ஒப்பந்தகாரரின் கோரிக்கைகளின் பிரகாரம் ஆரம்ப ஒப்பந்த காலத்தை விட அதிக காலமொன்று அதாவது நான்கு மாத காலம் வேலை அத்தியட்சகரின் சிபாரிசின் அடிப்படையில் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டு நீடிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 பெப்ரவரி

15 ஆந் திகதியில் வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2018 மார்ச் 15 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் பிரகாரம் உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்ட 72 வேலை விடயங்களில் 53 விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | குறைபாடுகள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | நிலுவை ஆதனவரி வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) | கணக்கீடு | கணக்கு மீதிகளுக்கும் பட்டோலைகளின் மீதிகளுக்கும் இடையே வேறுபாடுகள் காணப்பட்டமை |
| (இ) | செயல்திட்டத்தை அமுல்படுத்துதல் | பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் அமுல்படுத்தப்படாமை மற்றும் தாமதக் கட்டணம் அறவிடப்படாமை |
| (ஈ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | சபையின் சொத்துக்களின் உரித்து உறுதிப்படுத்தப்படாமை மற்றும் சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்படாமை |